RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s1928

# திருக்குறள் காட்டும் அற வாழ்க்கை

**மு. ஜெயமணி [அ, *]**

[அ] தமிழ்த்துறை, இராமசாமி தமிழ்க்கல்லூரி, காரைக்குடி-630003, தமிழ்நாடு, இந்தியா

# The Moral Life as shown by Thirukkural

**M. Jeyamani [a, *]**

[a] Department of Tamil, Ramasamy Tamil College, Karaikudi-630003, Tamil Nadu, India

* Corresponding Author: shanmugamjeyamani@gmail.com

Received: 09-08-2022
Revised: 16-09-2022
Accepted: 06-10-2022
Published: 10-12-2022

Check for updates

**ABSTRACT**

This research article, titled 'The Moral Life as shown in Thirukkural,' focuses on morality through Thirukkural. From time to time, society absorbs various changes and travels with them. As a result, we have become accustomed to living without forgetting and not knowing various cultural identities. This article presents the restoration of such forgotten morality and the benefits of humanity that come from a virtuous life. It is because we have forgotten the virtues that hatred surrounds us. This article attempts to convey to human society and the world of Tamil studies the deeper idea that if morality is restored, hatred can be lost.

**Keywords:** Thirukkural Moral Life, Humanity, Tamil Studies

## முன்னுரை

கல் தோன்றி மண் தோன்றா காலத்தே வாளொடு முன் தோன்றிய மூத்த குடி நம் தமிழ்க்குடி" இது வரலாற்றுப் பதிவு. இச்சிறப்புப் பெற்ற தமிழுக்கும் தமிழ் இனத்திற்கும் பெருமை சேர்க்கும் பெட்டகமாகத் திகழ்வது தமிழகம் தந்த வள்ளுவனால் தரணிக்குச் சொன்ன திருக்குறள். அச்சுக் கூடங்கள் அறவே இல்லை, எழுது பொருட்கள் தானும் இல்லை, காகிதங்களைக் கண்டவர்கள் யாரும் இல்லை இப்படிப்பட்ட காலத்தில் பனைஓலை துணை கொண்டு எழுத்தாணி கைக்கொண்டு எக்காலமும் போற்றும் முப்பாலாம் திருக்குறளை இம்மண்ணிற்கு வழங்கிச் சென்றான் வள்ளுவன்.

அறத்தைச் சொல்லிக் கொடுத்து பொருளை அள்ளிக் கொடுத்து, இன்பத்தோடு வாழ வழிகாட்டிய நூல் திருக்குறள். உலக மக்களின் நல்வாழ்விற்கு ஊன்றுகோலாக இருந்து தாங்கிப் பிடித்துக் கொண்டிருக்கிறது. மழலை தொடங்கி நாட்டை ஆளும் மன்னன் வரைக்கும் எப்படி வாழ வேண்டும் எப்படி வாழக் கூடாது என்று பாதை காட்டிய பண்பாட்டு நூல் (Gunapalasingam et al., 2022). ஒரு தனிமனிதன் அவனது வாழ்க்கையில் ஒரு முறையாவது திருக்குறளை முழுமையாகப் படித்து அதன் வழி வாழ்வானேயானால் நிச்சயமாக குற்றங்களும், வன்மங்களும் இல்லாத சமுதாயம் சாத்தியமாகும் என்பதில் எள்ளலவும் மாற்றமில்லை.

## கடல்கடந்தும் வாழ்கிறது

ஒட்டு மொத்த உலக அளவிலான வாழ்வியலைப் பார்ப்போமேயானால் வன்மம் மட்டுமே தன் பாதையை விரிவுபடுத்திக் கொண்டிருக்கிறது. அறம் சார்ந்த வாழ்வியல் தடம் அழிந்து போய்க் கொண்டிருக்கிறது. இது தான் எதார்த்தம். இதனை யாராலும் மறுக்க முடியாது. பல நூற்றாண்டுகளுக்கு

முன் வாழ்ந்த வள்ளுவன் எதிர்காலத்தில் இப்படி எல்லாம் நடந்துவிடக்கூடாது என்பதனை கணித்து எச்சரிக்கை செய்தான். குறளில் பல இடங்களில் தனி மனித ஒழுக்கத்தை வலியுறுத்திச் சென்றிருக்கிறான். "மனிதர்கள் தனக்கென வரையறுத்துக்கொண்ட ஒழுக்கமுறைகளின் தொகுதியே முழுநிறை வடிவமே அறம் என்று கூறுவர்" (Parimelzhagar, 2008). சமூகத்தின் வாழ்வியல் நெறிமுறைகளைக் கட்டமைத்துக் காட்டி இருக்கிறான். அரசியலை அலசி ஆராய்ந்திருக்கிறான். இல்லற வாழ்க்கை இனிமையாக அமைய இலக்கணம் கற்பித்துச் சென்று இருக்கிறான். வள்ளுவத்தின் வாழ்வியல் தத்துவங்கள் இன்றளவும் கடல் கடந்தும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

## இல்லறம்

தமிழில் உள்ள இலக்கியங்கள் அனைத்தும் ஏதோ ஒரு வகையில் அறத்தை மையமிட்டு எழுதப்பட்டுள்ளன. மாசற்ற மனநிலையே அறவாழ்வின் அடிப்படை என்பதனை வள்ளுவர் எடுத்துரைக்கிறார். வாழ்வியல் என்பது எப்படியும் வாழ்ந்துவிட்டுச் செல்லலாம் என்பதல்ல. அதற்கென்று சில கட்டுப்பாடுகளையும், கட்டமைப்புகளையும் சமூகம் கட்டிக்காத்து வருகிறது. அதிலிருந்து பிறழாமல் தனக்கும், தான் சார்ந்த சமூகத்திற்கும் நல் ஒழுக்கத்தைப் போதித்து அவ்வழியில் தானும் தான் சார்ந்த சமூகமும் பயணிக்க எவன் ஒருவன் முற்படுகிறானோ அவனே அறத்தின் அடிநாதமாக விளங்குவான். இது இல்லறம், துறவறம் இரண்டிலும் உண்டு என்பதை வள்ளுவனின் அறக்கருத்துகள் முன் வைக்கும் உண்மையாகும்.

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை

பண்பும் பயனும் அது"

எனும் குறளில் வள்ளுவன் இல்வாழ்க்கையையும் அது சார்ந்த அறத்தையும் பகிர்ந்துள்ளார். அன்பு என்பது அடிப்படை வாழ்க்கையின் சூத்திரம் (Parimelzhagar, 2008). இது மனிதரல்லாத உயிரினங்கள் தொடங்கி மனிதர்கள் வரைக்கும் பரவிக்கிடக்கும் வாழ்வியல் மந்திரம். ஆம். அன்பு செலுத்துவது இல்லையென்றால் இல்வாழ்க்கை முழுமையடையாது. கணவனும், மனைவியும் ஒத்துப்போக முடியாது. இதனைத்தான் வள்ளுவன் இல்வாழ்க்கையின் அடிநாதம் அன்பு என்கிறார். அதன்வழி செய்யப்படும் அறம்தான் அவ்வாழ்க்கையின் பயனாகும் என்பதையும் பதிவிட்டுச் செல்லக் காணலாம். ஆக இல்வாழ்க்கை சிறக்க வேண்டும் என்றால் அன்பும், அறமும் கட்டாயமாக வாழ்க்கையில் பின்பற்ற வேண்டும் என்பதே இக்குறள் நமக்கு உணர்த்தும் செய்தியாகும். எனவே நல்லொழுக்கம் நிறைந்த வாழ்க்கையை வாழ வேண்டும், அன்பு நிறை கொண்டு இல்வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும். அதனோடு அறத்தையும் பின்பற்றி வாழ்வானேயானால் அதுவே சிறந்த இல்வாழ்க்கைக்குச் சான்றாகும். இதனை வள்ளுவம் நமக்குக் கற்றுக்கொடுத்திருக்கிறது. "நல்ல குடும்பத்தினராக, நல்ல நாட்டினராக, கல்வி கேள்விகளில் சிறந்தவர்களாக, ஒழுக்கம் உடையவர்களாக, செயற்கரிய செயல்களை செய்பவர்களாக வாழ்ந்திட தமிழ்மறை நமக்கு வழிகாட்டுகிறது" எனும் தமிழறிஞரின் கருத்தினையும் ஈண்டு நாம் ஒப்பு நோக்கிப் பார்க்கத்தகும் நல்ல மனிதனாக வாழ்வதற்கு வள்ளுவம் வழிகாட்டுகிறது என்பதே மேற்சொன்ன செய்தியின் சாராம்சம் ஆகும்.

## மாசற்ற மனம்

இன்றைய வாழ்க்கைச் சூழலோடு நாம் சில கருத்துகளை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டியது காலத்தின் கட்டாயம் ஆகும். கடந்த தலைமுறை கண்டிராத கொலை, கொள்ளை, பாலியல் வன்மம், மது, மாது, சூது, இப்படியாகத் தனிமனித ஒழுக்கம் தடம் மாறிப்போன வாழ்வியல் முறைகள் இன்றைக்குப் பெருகிவிட்டது என்பது மறுக்க முடியாத உண்மை. பெருகிவரும் நாகரிகம் அதிகரித்து வரும் அறிவியலின் அபார வளர்ச்சிநிலை இவ்விரண்டும் இன்றைய சமுதாயத்தின் ஒழுக்கத்துடன் கூடிய வாழ்வியல் நெறியைக் கேள்விக்கு உள்ளாக்கியிருக்கிறது என்பது எதார்த்தமான உளவியல் உண்மை. இதற்கு அடிப்படைக் காரணம் மனநிலை மாற்றமே. ஒரு காலத்தில் ஒழுக்கத்தை உயிராக நினைத்து வாழ்ந்து மறைந்த சமூகத்தின் வழியில் வந்தவர்கள்தானே நாமும். அப்படி என்றால் அந்த

வழியிலிருந்து நாம் ஏன் தவறிப்போய்விட்டோம் என்பதனை இன்றைக்குக் கட்டாயம் யோசிக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம் என்பது மறுக்க முடியாத உண்மை.

மனம் ஒருநிலையில் இல்லை. நல்லதை யோசிக்க மனம் மறுக்கிறது. தீயவற்றைச் செய்ய மனம் பயப்படுவதில்லை. மன அழுத்தமும், மன உளைச்சலும் மிகுந்த சமூகமாக மாறிக்கொண்டிருக்கிறது. அதுதான் இத்தனை வன்மங்களுக்கும் வடிகாலாக இருக்கிறது. அப்படி என்றால் நாம் முதலில் மனதைச் செம்மைப்படுத்த வேண்டும். குற்றமற்ற மனநிலையில் வாழும் வாழ்க்கையை அறம் என்கிறான் வள்ளுவன்.

மாசற்ற மனம் எதுவோ அதுவே அறத்தின் அடிநாதம் என்பதே வள்ளுவன் நமக்குத்தரும் செய்தி. அப்படியென்றால், குற்றமற்ற, பொய்மையற்ற வாழ்வியல் சித்தாந்தத்தை நாம் கடைப்பிடிக்க வேண்டும். "திருக்குறளின் சிறப்பெல்லாம் அடிப்படையில் அது உண்மையை உரைப்பது. அதனால் இந்நூல் பொய்யாமொழி என்றே பெயரெடுத்துவிட்டது. நூலினை அருளிச்செய்த திருவள்ளுவரும் பொய்யில்புலவர் என்றே புகழப்பட்டார். அறம் உரைப்பதென்றாலும், உண்மை உரைப்பதென்றாலும் ஒன்றே. மாசுஅற்றது அறம். மாசு அற்றதே உண்மை" என்கிறார் தவத்திரு அழகரடிகள். ஆக மாசற்ற மனமே அறம் என்பதனை நாம் உள்வாங்க முடிகிறது,

இதனை வள்ளுவர்.

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அணைத்தறன்

ஆகுல நீர பிற"

மேற்சொன்ன குறளில் குற்றமற்ற மனமே அறம் என்று சொன்ன வள்ளுவன் தன் மனதில் இருந்து எதையெல்லாம் நீக்கிவிட வேண்டும் என்றும் பட்டியலிட்டுள்ளான் (Parimelzhagar, 2008).

"அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்

இழுக்கா இயன்றது அறம்"

பொறாமை, பேராசை, கோபம், கடுஞ்சொல் இவை நான்கையும் மனதைவிட்டு நீக்கி வாழ வேண்டும் என்பதே அறம் எனப் பட்டியலிட்டுச்சொல்கிறார். இன்றைய வாழ்வியலில் இவை நான்கும் சம அளவில் சமூகத்தில் பரவிக் கிடக்கிறது. அதனால் அறமற்ற வாழ்க்கையும் பெருகிவிட்டது. இந்நிலை மாற வேண்டும் என்பதே சமூகத்தின் எதிர்பார்ப்பாகும் (Goumareeswari, 2002).

"முற்பிறவியில் அறம் செய்வதன் இப்பிறவியில் பல்லக்கில் ஊர்ந்து செல்லும் செல்வ நிலையை அடைகிறான். அறம் செய்யாதவன் பல்லக்கை தூக்கி வாழும் வறிய நிலையை அடைகிறான் என்பதனை நேரே பார்த்து அறத்தின் பயனை உணர்ந்து கொள்" என்றும் அறத்தின் பயனைத் தெளிவுபடுத்தி உள்ளார். இதன்படி கர்மா எனும் வினையை நீக்கி அறத்தின் வழி வாழ வேண்டும். அவ்வாழ்க்கையைத்தான் காலம் கடந்தும் நம் தலைமுறையும் காக்கும் என்பதே வள்ளுவன் நமக்கு உணர்த்தும் செய்தியாகும்.

## துறவறம்

வாழ்வியல் முறைகள் இரண்டு நிலைகளில் அமைகிறது. இல்லறம், துறவறம், இரண்டுமே அறத்தோடு ஒட்டிய ஒழுக்க வாழ்வியலாகவே கருதமுடிகிறது. முன்னது குடும்பத்தோடு ஒட்டிய வாழ்க்கையும் பின்னது குடும்பத்தைத் துறந்த வாழ்வியலுமாகும். ஆசை இல்லாத பற்றற்ற வாழ்க்கையைத் துறவறம் என்கிறார் வள்ளுவர். ஆசையே துன்பத்துக்குக் காரணம் என்பர். அந்த ஆசையைத் துறந்து வாழப்பழகிக் கொண்டால் வாழ்க்கையில் துன்பம் என்பதில்லை இதனை வலியுறுத்தும் வள்ளுவர்,

"பற்றி விடாஅ இடும்பைகள் பற்றினைப்

பற்றி விடாஅ தவர்க்கு"

எனும் குறளில் ஆசையை விடாதவருக்குத் துன்பங்கள் சூழ்ந்து கொள்ளும் எனக்கூறக் காணலாம் (Goumareeswari, 2002). எல்லாம் தமக்கு, நானே என்றே அகங்காரம், அளவில்லாத ஆசைக்கொண்ட மனம் இவையெல்லாம் ஒரு மனிதனை ஆட்கொண்டால் பிறவித்துன்பத்திலிருந்து அவன் ஒருபோதும் விடுபட முடியாது என்பதனை வள்ளுவன் வலியுறுத்திச் சென்றிருப்பதனை காணமுடிகிறது.

## முடிவுரை

இலக்கியங்கள் என்பவை வாழ்வியல் முறைகளை ஒழுங்குபடுத்தும் தூரிகைகள் என்றால் மிகையாகது. நல்ல ஒழுக்கம் உடைய மனிதனால்தான் சிறந்த சமூகத்தைக் கட்டமைக்க முடியும். அதனால்தான் வள்ளுவன் உயிரைவிட ஒழுக்கம் சிறந்தது என்றான். சிலப்பதிகாரம் மூன்று உண்மைகளை உள்ளடக்கிய அறத்தினை முன் வைத்தது. களவிலும், கற்பிலும், அறம் கடைப்பிடிக்க வேண்டும் என்று சங்க இலக்கியங்கள் வலியுறுத்தின. ஆன்மீக அறத்தைப் பக்தி இலக்கியங்கள் பகிர்ந்துக் கொண்டன. ஆசையால் எழுந்த துன்பத்தை ராமாயணமும், மகாபாரதமும் நமக்குச் சுட்டிக்காட்டின. இப்படியாகப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே அறத்தோடு வாழ அடித்தளமிட்டுச் சென்ற வள்ளுவமும் ஒழுக்கமான வாழ்விலேயே வாழ்க்கையின் மிகச்சிறந்த அறம் என்ற கருத்தினை இச்சமூகத்திற்கு விட்டுச் சென்றிருக்கிறது.

## References

Goumareeswari, S, (2002) Thirukkural, Saradha Pathippagam, Chennai, India.

Gunapalasingam, V., Mumthaj Sameem M.S.J., Suresh, R. (2022) A comparative perspective of fact in Thirukkural and Thiruvarutpayan, Indian Journal of Tamil, 3(3), 1–4. https://doi.org/10.54392/ijot2231

Parimelzhagar, (2008) Thirukkural Moolamum uraiyum, Saratha Publications, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License